செ.வெ.எண்:23 நாள்: 17.06.2019

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 2014-2015ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பைத்தொடர்ந்து சமுதாய வளர்ச்சக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு 2015ஆம் ஆண்டு முதல் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு இவ்விருது வழங்கப்படும் என்றும் இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ரூ.50,000/- ரொக்கம், பாராட்டுப்பத்திரம் மற்றும் பதக்கத்தினை உள்ளடக்கியதாக இருக்கும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி 2019ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது 15.8.2019 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படஉள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்க்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த ஆண் / பெண் விண்ணப்பிக்கலாம். அதாவது 1.4.2018 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். அல்லுத 31.3.2019 அன்று 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2018-2019 ஆண்டில் அதாவது 1.4.2018 முதல் 31.3.2019 வரை மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் தமிழகத்தில் 5 வருடம் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்படவேண்டும்.

சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு சமுதாயத்தில் கண்டறியக்கூடியதாகவும், அளவிடக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். பள்ளி / கல்லூரி / பொதுத்துறை நிறுவனங்கள் / மத்திய/மாநில அரசுப்பணியில் உள்ளவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர். உள்ளூர் சமுதாய மக்களிடம் அவர்களுக்குள்ள மதிப்பினை இவ்விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும். மேற்காணும் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

இவ்விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in என்ற இணையத்தளத்தினின்றும் பெற்றுக்கொள்ளலாம். ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

**இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வெளியீடு நாள். 10.6.2019**

**இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் 02.07.2019 - மாலை 5.00 மணி**

மேலும், விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அரியலூர் அவர்களை 7401703499 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**